POLITICAL SCIENCE WORK SHEET

பொருள் விளக்கம்:
Meaning and Scope

- ஜீன்போடின் (1530-1596) எனும் பிரெஞ்சு நாட்டு அரசியல் தத்துவ ஞானி தான் அரசியல் அறிவியல் என்ற சொல்லை உருவாக்கினார்.

- கிரேக்க அரசியல் தத்துவ ஞானியான அரிஸ்டாட்டில் என்பவர் (கி.மு.384-322) அரசியல் என்ற சொல்லை முதன்முதலாக பயன்படுத்தினார். அரசியல் என்ற சொல் நகர அரசு என்ற பொருள்படும் போலிஸ் (POLIS) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து ஆங்கிலச் சொல்லான ''பாலிடிக்ஸ்'' எடுத்தாளப்பட்டது.

- மாக்ஸ் வீபரின் ''அதிகாரவர்க்கம்'' கிராஹம்வேல்சின் ''அரசியலில் மனிதர்களின் தன்மை'' ஆர்தர் பெட்டேலியின் ''அரசாங்கத்தின் செயல் தொடர்'' ஆகியன அரசியலை அறிவது பற்றி ஆய்ந்தளிதல் முறையில் எழுதப்பட்டது.

அரசியல் அறிவியல் மற்றும் பொருளாதாரம்:
Political Science and Economics:

- ஆடம் ஸ்மித் பொருளாதாரத்தின் தந்தையென போற்றப்பட்டார். ஆடம் ஸ்மித் தன்னுடைய ''உலக நாடுகளின் செல்வத்தின் தன்மை மற்றும் தோற்றம் பற்றிய ஆய்வு'' நூலில் பொருளியல் அரசியல் அறிவியலின் ஒரு கிளை என்று குறிப்பிட்டுள்ளார். இதுவே 'அரசியல் பொருளாதாரம்' என்று (Political Economy) அழைக்கப்பட்டது.

அரசு:

STATE:

பொருள் விளக்கம்:

Definition:

- அரசு இயற்கையாகவே தோன்றியதொன்றாகும். மனிதன் ஒரு சமூகப் பிராணி ஆவான்.அவன் தனது இயல்பால் அரசியல் பிராணியாகவும் ஆகிறான் என அரிஸ்டாட்டில் குறிப்பிடுகிறார். அவரது கருத்துப்படி மனிதனாக இருப்பதும் ஒரு அரசின் கீழ் வாழ்வதும் ஒன்றே ஆகும்.

- நிக்கோலோ மச்சியாவெல்லி (1469-1527) தான் தனது எழுத்துக்களில் ”அரசு” என்ற வார்த்தையை முதன்முதலில் பயன்படுத்தினார். அவரது முக்கியமான படைப்புக்கு ”இளவரசர்” என்று பெயரிடப்பட்டுள்ளது.

- உட்ரோவில்சன் என்பவர், “அரசு என்பது ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில், சட்டத்திற்காக அமையப்பெறும் மக்கள் கூட்டமாகும் என்கிறார்.”

- அரிஸ்டாட்டில், அரசு என்பது “ஆனந்தமான மற்றும் கௌரவமான வாழ்க்கை அடங்கிய தன்னிறைவான வாழ்க்கை பெறுவதற்காக கிராமங்களும், குடும்பங்களும் இணைந்த ஒன்றியமாகும் எனக்குறிப்பிடுகிறார்”

அரசின் கூறுகள்

- மக்கள்தொகை
- நிலப்பகுதி
- அரசாங்கம்
- இறைமை

- அரிஸ்டாட்டில் மக்கள் தொகையை துல்லியமாகச் சொல்லாமல், மிகக் குறைவாகவும் இருக்கலாகாது, அதே நேரத்தில் மிக அதிகமாகவும் இருத்தலாகாது, அதே நேரத்தில் மிக அதிகமாகவும் இருத்தலாகாது என்றுரைத்தார். ரூசோ என்பவர் ஓர் இலட்சிய அரசு என்பது 10,000 மக்கள் தொகையுடையதாய் இருத்தல் வேண்டும் என்று கூறினார்.

இறைமை:
Soverignity:

- ஜீன் போடின் என்பவர் தான் தன்னுடைய ‘‘குடியரசைப்பற்றிய ஆறு நூல்கள்’’ என்ற நூலில் இறைமை என்ற கருத்தை முதன்முதலாக முறைப்படியாக பயன்படுத்தினார்.
- ஜீன் போடின் இறையாண்மையை ”ஒரு மாநிலத்தில் கட்டளையிடுவதற்கான முழுமையான மற்றும் நிரந்தர சக்தி” என்று வரையறுத்தார். சட்டத்தால் கட்டுப்படுத்தப்படாத குடிமக்கள் மற்றும் குடிமக்கள் மீது இது மிக உயர்ந்த அதிகாரமாகும்

பொருள் விளக்கம்:
Definition

- நவீன அரசுகள் தோன்றும்போது அதனுடன் இறைமைக் கருத்தும் உருவாக்கப்பட்டது. இறைமை என்ற சொல் (Sovereignty) லத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். அதற்கு உயர்ந்த அதிகாரம் என்று பொருள். பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த ஜீன் போடின் (1530-1597) என்பவர் நவீன இறைமை கோட்பாட்டின் தந்தையாவார்.

- இறைமை தன்மை என்பது 1. உள் இறைமை 2. வெளி இறைமை என இரண்டு வகைப்படும்
- உள் இறைமை என்பதற்கு அரசு தனது எல்லைக்குள் உள்ள குடிமக்கள் மற்றும் சங்கங்கள் மேல் தலைமையான அதிகாரத்தை செலுத்தவல்ல அதிகாரமுடையதென பொருள். வெளி இறைமை என்பது தன் அதிகார எல்லைக்கு வெளியேயுள்ள யாரும் தன்னை கட்டுப்படுத்த முடியாத சுதந்திரமுடையது என பொருள்.

இறைமையின் வகைகள்
Kinds of Sovereignty:

1. பெயரளவிலான இறைமை:
Titular Sovereignty:

பெயரளவிலான இறைமை என்பது பெயரளவில் மட்டுமே உள்ளதாகும். இது மன்னரின் அல்லது அரசரின் செயல்படுத்தப்படாத அதிகாரத்தைக் குறிப்பதாகும்.

2. உண்மை நிலை மற்றும் சட்டநிலை இறைமை (De Jure)
De Facto and De Jure Sovereignty:

- உண்மைநிலை இறைமை என்பது ஒருவர் சட்டபடியாகவும் அல்லாமல் மற்றும் அரசியலமைப்பு படியும் ஆதரவு இல்லாமல் ஆட்சி செலுத்துவதை கூறலாம். சட்டரீதியான இறைமை என்பது சட்டத்தின் மூலமாக அங்கீகாரம் மற்றும் அரசியலமைப்புப்படி பெற்றுள்ள அதிகாரமாகும். புரட்சியின் மூலமாக ஆட்சியில் மாற்றம் ஏற்படும் சூழ்நிலையில் உண்மைநிலை இறைமையும், சட்டரீதியான இறைமையும் காணமுடியும். உதாரணமாக இத்தாலியில் புரட்சியின் மூலமாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது சட்டரீதியாக ஆட்சியிலிருந்த விக்டர் இம்மானுவேல் அதிகாரம் செலுத்த முடியவில்லை.

3. சட்டம் மற்றும் அரசியல் இறைமை
Legal and Political Sovereignty:

- சட்ட இறைமையானது பின்வரும் தன்மைகளை பெற்றிருக்கிறது.

1. சட்ட இறைமையானது எப்பொழுதும் தெளிவானது மற்றும் முடிவானது
2. சட்ட இறைமையானது தனிமனிதனிடமோ அல்லது குழுவினிடமோ இருக்கலாம்
3. தீர்க்கமாக அமையப்பெற்ற சரியாக சொல்லப்பட்டிருப்பது, அது சட்டப்பூர்வமானது
4. குடிமக்களுக்கு அளிக்கப்பெற்றுள்ள உரிமைகள் சட்ட இறைமையின் கொடையாகும்.

4. மக்கள் இறைமை
Popular Sovereignty:

- ஒரு அரசில் இறைமை அதிகாரம் மக்களிடத்தில் இருப்பதை மக்கள் இறைமை எனலாம். இந்த கொள்கையானது ரூசோவால் சொல்லப்பட்டு பின்னால் பிரெஞ்சு புரட்சியின் முக்கிய கோரிக்கைகளாக அமைந்தன. மக்கள் இறைமையின் தத்துவத்துவமானது மக்கள்தான் இறைமை அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்பதாகும்.

ஆஸ்டினின் இறைமைக் கோட்பாடு (ஒருமைவாதக் கருத்து)
Austin's Theory of Sovereignty (Monistic View):

- பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஆங்கிலேய நாட்டைச் சார்நத சட்ட வல்லுனர் ஆஸ்டின் இறைமையைப்பற்றிய சட்ட கோட்பாட்டை எடுத்தக்கூறினார். அவருடைய கோட்பாடு இறைமையைப்பற்றிய ஒருமைவாதக் கோட்பாடு என்று அழைக்கப்படுகிறது.

- 1832ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ''சட்டத்தின் எல்லை தீர்மானிக்கப்படுகிறது.'' என்ற நூலில் ஆஸ்டின் பின்வருமாறு கூறுகிறார்.

- ஆஸ்டினின் இறைமைக்கோட்பாடு சட்டத்தின் தன்மையைப் பொறுத்து இருக்கிறது. ஆஸ்டினின் கருத்துப்படி ''சட்டம் என்பது உயர்வானவர், தனக்கு கீழ் உள்ளவர்களுக்கு கொடுக்கக்கூடிய கட்டளையாகும்

பன்மையாளரின் இறைமை கோட்பாடு
Pluralist Theory Of Sovereignty:

- லாஸ்கி கருத்தப்படி இறைமை என்பது முழுவதுமாகவும் ஒன்றாகவும் இல்லை. அது பன்மையானது அரசியலமைப்பு படி அமைந்தது, பொறுப்பானது. தனிதனிதன் மீது முழு ஆதிக்கம் செலுத்த அரசுக்கு அதிகாரம் இல்லை.

<u>அரசியலமைப்பு:</u> (Constitution)

- அரசியலின் தந்தை எனப்போற்றப்படும் அறிஞர் அரிஸ்டாட்டில் ''குடிமக்கள் அரசின் அங்கம் எனவும் அவர்களுடைய தொடர்புகளை அரசியலமைப்பு ஒன்றோடு ஒன்று தொடர்புபடுத்தி ஒழுங்குபடுத்துகிறதெனவும்'' கூறுகிறார்.

- உல்சே அரசிலமைப்பு என்பது அரசாங்கத்தின் அதிகாரத்தை பற்றியும் ஆளப்படுவோரின் உரிமைகள் பற்றியும் இவை இரண்டிற்கும் இடையேயுள்ள உறவுகள் பற்றியும், எடுத்துக்கூறும் விதிகளின் தொகுப்பு'' என்றும் விளக்குகின்றார்.
- கீழே தரப்பட்டுள்ள காரணங்களுக்காக அரசியலமைப்பு தேவைப்படுகிறது
  1. நிர்வாக அமைப்பும், நிறுவனமும்
  2. அரசாங்க அங்கங்களின் செயல்பாடுகள் அதிகாரங்கள் மற்றும் இடையே உள்ள தொடர்புகள்
  3. குடிமக்களின் அடிப்படை உரிமைகள்
  4. மக்களுடன் அரசாங்கத்தின் உறவு
  5. அரசியலமைப்பு திருத்தம் செய்யும் முறைகள்

அரிஸ்டாட்டிலின் அரசமைப்பு வகைகள்:
Aristotle's Classification of Constitution:

1. ஒருவர் ஆட்சி - முடியாட்சி – கொடுங்கோலாட்சி
2. சிலர் ஆட்சி – உயர்ந்தோர் குழு ஆட்சி – தன்னல குழு ஆட்சி

3. பலர் ஆட்சி – நல்லாட்சி – மக்களாட்சி

அரசியலமைப்பின் வகைப்பாடுகள்
TYPES OF CONSTITUTION

I. இயல்பான மற்றும் இயற்றப்பட்ட அரசமைப்பு
Evolved And Enacted Constitutions:

- விதிமுறைகளின் வளர்ச்சி, தேவை இவைகளின் அடிப்படையில் உருவானதுதான் இயல்பான மற்றும் பரிணாம வளர்ச்சியினால் உருவாக்கப்பட்ட அரசமைப்பு.

- இயற்றப்பட்ட அரசமைப்பு முழுக்க மனிதனின் முழு முயற்சியினால் இயற்றப்பட்டதே ஆகும். மனசாட்சிப்படி உருவாக்கப்பட்டதுதான் அரசமைப்புகள். பெரும்பாலும் அரசர்களாலும், பாராளுமன்றத்தாலும், உயர்ந்த அதிகாரம் படைத்தவர்களும் ஏன் அரசமைப்பு பேரவையினாலும் இயற்றப்பட்டவையே.

II. எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத அரசமைப்பு
Written And Unwritten Constitution:

- எழுதப்பட்ட அரசமைப்பு ஆவண வடிவில் அல்லது நூல் வடிவில் அடிப்படை மற்றும் அரசாங்கங்களின் பல்வேறு அங்கங்களுக்கு தேவையான விதிமுறைகளின் தொகுப்பேயாகும். தீர்க்கமான முறையில் உருவாக்கப்பட்டதே. நேர்மையாக, மனசாட்சிப்படி திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. ஒருசில நாடுகளில் அரசமைப்பு பேரவையினாலும். மரபுப்படியும் உருவாக்கப்பட்டிருக்கலாம். எழுதப்பட்ட அரசமைப்பு இந்தியநாட்டில் உருவாக்கப்பட்டு மற்றும் அரசமைப்பு பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- அமெரிக்காவின் அரசமைப்பு, பிரதிநிதிகளின் பிரத்தியேக கூட்டத்தில் அதிபர் ஜார்ஜ்வாஷிங்டன் தலைமையில் தயாரிக்கப்பட்டது. இந்த அரசமைப்பு செப்டம்பர் 17, 1787-ல் பிலடெல்பியா மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்னர் அவை மாகாண அரசுகளின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது.

- ஒரு நாட்டின் அரசியலமைப்பு உருவாவது அந்த நாட்டின் இயல்பான வளர்ச்சியையும் கட்டுப்பாடுகளையும் நடைமுறைகளையும் பொறுத்ததாகும். இது ஆவணங்களில் சொல்லப்பட்டிருக்க வேண்டியதில்லை. ஒரு சில எழுதப்பட்டிருந்தாலும் அவை எழுதப்படாத அம்சங்களை விட மிக குறைவாக உள்ளதாக அறியலாம். எ.கா. இங்கிலாந்து

நெகிழும் மற்றும் நெகழா அரசமைப்பு
Flexible And Rigid Constitution:

- நெகிழும் அரசமைப்பில் அரசமைப்பு சட்டத்திற்கும் சாதாரண சட்டத்திற்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. இரண்டுமே ஒரே மாதிரியான முறைகளைப் பின்பற்றியே இயற்றப்படுகின்றன. அரசமைப்பு பொதுவாக மரபுகளின் அடிப்படையிலோ அல்லது எழுதப்பட்டோ இருக்கின்றன. ஒரே மாதிரியாகவே திருத்தம் செய்யப்படுகின்றன. அரசியலமைப்புச் சட்டத்திற்கும் சாதாரண சட்டத்திற்கும் திருத்தம் செய்ய எவ்வித பிரத்தியேக நடைமுறையும் பின்பற்றப்படவில்லை.
- நெகிழும் அரசியலமைப்பிற்கு சிறப்பான உதாரணமாக இங்கிலாந்து அரசமைப்பை கருதலாம். இங்கிலாந்து பாராளுமன்றமே உயர்ந்த அதிகாரம் அல்லது இறைமை அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது.

- நெகிழா அரசமைப்பில் திருத்தம் செய்ய சில பிரத்தியேக முறைகள் தேவைப்படுகின்றன. நெகிழா அரசமைப்பிற்கு உதாரணங்களாக அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளை குறிப்பிடலாம்.

- நெகிழா அரசமைப்பு சாதாரண சட்டங்களைவிட உயர்வானது. சாதாரண சட்டங்களை மாற்றுவது போல் இல்லாமல் சில குறிப்பிட்ட தனி வழிகள் மூலம்தான் நெகிழா அரசியலமைப்பிற்கு திருத்தம் மேற்கொள்ளலாம். இதனால் திருத்தம் செய்வது கடினமாகும். அரசின் இறைமைக்கு உயர்வு அளிப்பதே நெகிழா அரசியலமைப்பின் நோக்கமாகும். இத்தன்மைக்கு புனிதத்துவம் வழங்குவது அரசியலமைப்பே ஆகும்.

அரசாங்கத்தின் வகைப்பாடுகள்
FORMS OF GOVERNMENT

I. கூட்டாட்சி அரசாங்கம் (Federal Form of Government)

1. அரசியல் அறிஞர்கள் தேசிய அரசாங்கத்திற்கும் பிராந்திய அரசாங்கங்களுக்கும் இடையிலான உறவுகளின் தன்மையின் அடிப்படையில் அரசாங்கங்களை ஒற்றையாட்சி மற்றும் கூட்டாட்சி என வகைப்படுத்தியுள்ளனர்

2. கூட்டாட்சி என்ற சொல் லத்தீன் வார்த்தையான FOEDUS என்பதிலிருந்து பெறப்பட்டது அதன் பொருள் ஒப்பந்தம் என்று பொருள்

3. ஒரு கூட்டாட்சி அரசாங்கம் என்பது அரசியலமைப்பால் தேசிய அரசாங்கத்திற்கும் பிராந்திய அரசாங்கங்களுக்கும் இடையில் அதிகாரங்களைப் பிரித்து, இரண்டும் அந்தந்த அதிகார வரம்புகளில் சுயாதீனமாக செயல்படுகிறது. எடுத்துகாட்டு: அமெரிக்கா, , சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா, ”யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆ.்.ப் அமெரிக்கா ஆகியவை கூட்டாட்சி நாடாக மாறியது

கூட்டாட்சி இயல்புகள் (Federal Features):

1. இரட்டை அரசாங்கம்
2. எழுதப்பட்ட அரசமைப்பு
3. அதிகாரப் பங்கீடு
4. அரசமைப்பின் மேலானதன்மை
5. சுதந்திரமான நீதித்துறை

இரட்டை அரசாங்கம்
Dual Polity

- அரசியலமைப்பு, மையத்தில் யூனியன் மற்றும் சுற்றளவில் மாநிலங்கள் கொண்ட இரட்டை அரசியலை நிறுவுகிறது.

எழுதப்பட்ட அரசியலமைப்பு
Written Constitution

- அரசியலமைப்பு என்பது எழுதப்பட்ட ஆவணம் மட்டுமல்ல, உலகின் மிக நீளமான அரசியலமைப்பு ஆகும்.

அதிகாரப்பங்கீடு
Division of Powers

- அரசியலமைப்பு ஏழாவது அட்டவணையில் யூனியன் பட்டியல், மாநில பட்டியல் மற்றும் ஒருங்கிணைந்த பட்டியல் ஆகியவற்றின் அடிப்படையில் மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையே அதிகாரங்களைப் பிரித்தது. அட்டவணை ஏஐஐ, பிரிவு 246 அதிகாரப் பிரிவினையைக் குறிக்கிறது.

அரசமைப்பின் மேலானதன்மை
Supremacy of the Constitution

- அரசமைப்பு நாட்டின் மிக உயர்ந்த சட்ட ஆவணமாகும் எல்லா அரசாங்கங்களும் அரசமைப்பின் நடைமுறைகள் விதிகள் மற்றும் வழிமுறைகள் ஆகியவற்றை பின்பற்ற வேண்டும்

சுதந்திரமான நீதித்துறை
Independent Judiciary

- அரசியலமைப்பு உச்ச நீதிமன்றத்தின் தலைமையில் சுதந்திரமான நீதித்துறையை நிறுவுகிறது.

II. ஒற்றையாட்சிமுறை அரசாங்கம் (Unitary Form of Government):

ஒற்றையாட்சி அரசாங்கம் அல்லது அரசு என்பது ஒன்றாக இணைத்து ஆட்சி செய்யப்படக்கூடிய இறையாண்மையுடைய அரசு ஆகும். ஒற்றையாட்சி முறை அரசாங்கத்தில், மத்திய அரசாங்கமே அனைத்து அதிகாரத்தையும் உள்ளடக்கியதாகும். நிர்வாக காரணங்களுக்காகத் தோன்றிய பிற பிரிவுகள் மத்திய அரசாங்கம் தற்காலிகமாகப் பகிர்ந்தளித்த அதிகாரத்தின் அடிப்படையிலேயே செயல்பட இயலும்.

ஒற்றையாட்சி முறை அரசாங்கங்கள் - உதாரணம் : இங்கிலாந்து, பிரான்சு, ஜப்பான் மற்றும் இலங்கை:

ஒற்றையாட்சி அரசாங்கத்தில் அனைத்து அதிகாரங்களும் மையமாக ஓரிடத்தில் குவிந்து இருக்கும். மாறாக கூட்டாட்சி அரசாங்கத்தில் அதிகாரமானது மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படும். ஒற்றையாட்சி அரசாங்கத்தில் ஆதிகார பகிர்வு இருப்பினும் அக்காரணத்தினால் அதனை கூட்டாட்சி முறை என முடிவு செய்ய இயலாது.

ஒற்றையாட்சி இயல்புகள்
Unitary Features:

1. ஒற்றை அரசமைப்பு
2. மாநிலங்களின் சமநிலையற்ற பிரதிநிதித்துவம்
3. நெருக்கடிநிலை அதிகாரங்கள்
4. ஒற்றைக் குடியுரிமை
5. ஒருங்கிணைந்த ஒரே நீதித்துறை
6. அனைத்திந்திய பணிகள்
7. கவர்னர் நியமனம்

நாடாளுமன்ற முறை அரசாங்கம் மற்றும் குடியரசுத்தலைவர் முறை அரசாங்கம்

Parliamentary form of government & Presidential Form of Government

அறிமுகம்
Introduction

1. அரசாங்கம் என்பது அரசின் மிக முக்கிய அங்கமாகும்.

2. அரசாங்கம் என்பது சட்டம் இயற்றுதல், செயல்முறைப்படுத்துதல் மற்றும் நீதி வழங்குதல் சார்ந்த பணிகளையும் மேற்கொள்கிறது.

3. சட்டமன்றம், நீதிமன்றம் மற்றும் செயலாட்சித் துறை ஆகிய மூன்றும் சட்டம் மற்றும் அரசமைப்பின் அடிப்படையில் அரசாங்கத்தின் அங்கங்கள் அகும். அரசாங்கத்தைப் பின்வரும் வகையில் நாடாளுமன்றமுறை, குடியரசுத்தலைவர் முறை என வகைப்படுத்தலாம்.

Parliamentary form of government
நாடாளுமன்ற முறை அரசாங்கம்:

தற்கால மக்களாட்சி அடிப்படையிலான அரசாங்கங்கள் நாடாளுமன்ற முறை அரசாங்கம் மற்றும் குடியரசுத்தலைவர் முறை அரசாங்கம் என வகைப்படுத்தப்படுகின்றன.

இந்த வகைப்படானது அரசாங்கத்தின் சட்டமியற்றும் அமைப்பிற்கும், செயலாட்சிக்கும் இடையேயான உறவுகளின் தன்மையில் அடிப்படையிலானதாகும்.

நாடாளுமன்ற முறை அரசாங்கத்தில் செயலாட்சியானது தனது கொள்கைகள் மற்றும் செயல்பாட்டிற்காக, நாடாளு மன்றத்திற்குப் பொறுப்பானதாகும்.

நாடாளுமன்ற முறை அரசாங்கம் என்பது அமைச்சரவை முறை அரசாங்கம் என்றும், கடமைப்பாடுடைய அரசாங்கம் அல்லது வெஸ்ட் மினிஸ்டர் (West Minister) அரசாங்கம் என்றும் அழைக்கப்படுகிறது. இங்கிலாந்து, ஜப்பான்,கனடா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் நாடாளுமன்ற முறை அரசாங்கத்தைப் பின்பற்றுகின்றன.

Features of parliamentary form of government
நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் இயல்புகள்:

1. **பெயரளவு செயலாட்சி மற்றும் உண்மையான செயலாட்சி:**
   Nominal and Real Executives (Dual Executive):

   குடியரசுத் தலைவர் பெயரளவு அதிகாரம் கொண்ட செயலாட்சியாவார் (de-jure executive (or) titular executive). மாறாக பிரதம மந்திரி உண்மையான அதிகாரம் கொண்ட செயலாட்சியாக விளங்குகிறார் இவ்வகையில் குடியரசுத் தலைவர் நாட்டின் தலைவர் என்றும் பிரதம மந்திரி அரசாங்கத்தின் தலைவர் என்றும் கருதப்படுகிறார்.

2. **பெரும்பான்மை பெற்ற அரசியல் கட்சியின் ஆட்சி:**
   Majority Party Rule:

   நாடாளுமன்றத்தின் கீழவையில் பெரும்பான்மைப் பெற்ற கட்சியே ஆட்சி அமைக்கின்றது. அக்கட்சியின் தலைவர் குடியரசுத் தலைவரால் பிரதம மந்திரியாக நியமிக்கப்படுகிறார். பிற அமைச்சர்கள் பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் குடிரயசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர். எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் கட்சிகளின் கூட்டணியை குடியரசுத் தலைவர் ஆட்சி அமைக்க அழைப்பு விடுப்பார்.

3. **இரட்டை உறுப்பினராதல்:**
   Double Membership:

   அமைச்சர்கள் ஒரே நேரத்தில் நாடாளு மன்றத்திலும் செயலாட்சிப் பிரிவிலும் உறுப்பினர்களாக இருப்பர்.

4. **பிரதமமந்திரியின் தலைமை:**
   Leadership of the Prime Minister
   நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் பிரதம மந்திரியே தலைமை பொறுப்பு வகிக்கிறார். அவரே அமைச்சரவை குழு, நாடாளுமன்றம் மற்றும் ஆட்சியிலுள்ள கட்சியின் தலைவர் ஆவார்.

5. **சட்டமன்றம் மற்றும் செயலாட்சி இடையேயான நல்லிணக்கம்**
   Harmony between Legislature and Executive:

   நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் மிகப்பெரிய நன்மையாதெனில் அது அரசாங்கத்தின் அங்கங்களான சட்ட மன்றம் மற்றும் செயலாட்சிக்கு இடையே. நல்லிணக்கமான உறவுகள் மற்றும் கூட்டுறவினை ஏற்படுத்துகிறது.

6. அதிகார பிரிவினைக்கு எதிராக இருத்தல்: Against Separation of Powers

நாடாளுமன்ற முறை அரசாங்கத்தில் செயலாட்சியும், சட்ட மன்றமும் ஒருங்கிணைந்து உள்ளது. அமைச்சரவையானது சட்ட மன்றம் மற்றும் செயலாட்சி பிரிவிற்கு தலைமை ஏற்கிறது. இக்காரணத்தால் நாடாளுமன்ற முறை அரசாங்கம் அதிகார பிரிவினை அடிப்படையிலான கோட்பாட்டிற்கு எதிராக செயல்படுகிறது என்றே கூறலாம்.

குடியரசுத்தலைவர் முறை அரசாங்கம் Presidential Form of Government

அமெரிக்க, பிரேசில், ரஷ்யா, இலங்கை உள்ளிட்ட பல நாடுகளில் அதிகாரத்தைப் பிரிக்கும் கொள்கையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட குடியரசு தலைவர் முறை அரசாங்க வடிவமானது நாடாளுமன்றம் அல்லாத நிர்வாக அமைப்பு என்றும் அறியப்படுகிறது.

குடியரசுத்தலைவர் முறை அரசாங்கத்தின் இயல்புகள்: Features of Presidential Form of Government

1. குடியரசுத் தலைவர் அரசுமற்றும் அரசாங்கத்திற்கு தலைவர் ஆவார். அரசின் தலைவர் என்ற முறையில் அவர் பெயரளவிலான நிலையினை வகிக்கிறார். அரசாங்கத்திற்குத் தலைவர் என்ற முறையில் அரசாங்கத்தின் செயலாட்சி பிரிவை தலைமையேற்று நடத்துகிறார்.

2. குடியரசுத் தலைவர் தனது அசைச்சரவை குழு அல்லது சிறிய அமைப்பின் உதவியுடன் அரசாங்கத்தை நடத்துகிறார். அது "சுயவிருப்ப அமைச்சரவை" (Kitchen cabinet) என அழைக்கப்படுகிறது.

3. குடியரசுத் தலைவரும் அவருடைய செயலாளர்களும் (அமைச்சர்கள்) அமெரிக்க நாடாளுமன்றத்திற்குப் (காங்கிரஸ்) பொறுப்பானவர்கள் அல்ல. மேலும் அவர்கள் நாடாளுமன்றத்தில் (காங்கிரஸ்) உறுப்பினர்களாக இருக்க வேண்டுமென்பதோ அதன் கூட்டத்தொடரில் பங்கு கொள்ள வேண்டுமென்ற அவசியமோ கிடையாது.
4. குடியரசுத் தலைவருக்கு நாடாளுமன்றத்தின் கீழவையான பிரதிநிதிகள் சபையினைக் கலைக்கும் அதிகாரம் இல்லை. அமெரிக்க குடியரசுத் தலைவர் முறையின் அடிப்படை சாராம்சமானது "அதிகார பிரிவினைக் கோட்பாடு" ஆகும். மேலும் சட்டமன்றம், செயலாட்சி மற்றும் நீதித்துறை சார்ந்த அதிகாரங்கள் தனித்தனியே பிரிக்கப்பட்டு மூன்று வெவ்வேறு சுதந்திரமான அங்கங்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

மக்களாட்சி
Democracy:

- ஆப்ரகாம்லிங்கன், ''மக்களாட்சி என்பது மக்களால் மக்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களால் ஆளப்படும் அரசாங்கமாகும்'' என கூறுகிறார்.
- மக்கள் என்று பொருள்படும் 'demos' மற்றும், ஆட்சியதிகாரம் என்று பொருள் தரும் 'Kratos' என்ற கிரேக்க மொழிச் சொற்களிலிருந்து மக்களாட்சி (democracy) என்னும் சொல் வந்தது.

நேரடி மக்களாட்சி
Direct Democracy:

- நேரடி மக்களாட்சி முறையில் அனைத்து குடிமக்களும் எவ்வித இடைப்பட்ட பிரதிநிதிகளில்லாமலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பணியமர்த்தப்பட்ட அலுவலர்கள் இல்லாமலும் மக்களாகவே நேரடியாக பொது முடிவுகளில் கலந்து கொண்டு பொது முடிவுகளை எடுக்கும் முறை நேரடி மக்களாட்சி எனப்படும்.

- நேரடி மக்களாட்சி முறையை நடைமுறைபடுத்த குறைந்த எண்ணிக்கையிலான மக்கள் உள்ள சமூகத்தில் அமைப்பில் அல்லது இன குழுக்களில் தான் நேரடி மக்களாட்சி முறை நடைமுறைபடுத்த முடியும். எடுத்துக்காட்டாக தொழிற்சங்கத்தின் குறைவான எண்ணிக்கை உள்ள கிளை கழகத்தில் உறுப்பினர்கள் ஒரு சிறு அறையில் ஒன்று கூடி தங்களுடைய கருத்துக்களை விவாதித்து, பெரும்பாலான உறுப்பினர்களின் விருப்பம் அல்லது வாக்களிப்பின் மூலம் ஒரு முடிவை எட்டுவதாகும்.

- பண்டைய கிரேக்க நாட்டின் எதென்ஸ் நகரத்தில் தான் உலகத்தில் முதன்முதலாக நேரடியான மக்களாட்சி முறை செயல்பட்டுக்கொண்டிருந்தது. அந்நகரில் 5000 மக்களிலிருந்து 6000 மக்கள்வரை ஒன்று கூடி தங்களடைய பொது முடிவுகளை எட்டினர். தற்பொழுது சுவிட்சர்லாந்து நாட்டில் தான் நேரடியான மக்களாட்சி முறை தேசிய அளவில் இன்றளவும் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.

நேரடி மக்களாட்சியின் கருவிகள்
Devices of the Direct Democracy:

1. தொடக்கவுரிமை
2. பொதுமக்கள் வாக்கெடுப்பு
3. திரும்ப அழைத்தல்

மறைமுக மக்களாட்சி
Indirect Democracy:

- ஒவ்வொரு குடிமகனும் தன்னுடைய நாட்டிற்காக நேரடியாகவோ அல்லது சுதந்திரமாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாகவோ அரசாங்கத்தில் பங்கெடுத்துக் கொள்வது மறைமுக மக்களாட்சி எனப்படும்.

- குடிமக்களின் விருப்பமே அரசாங்க அதிகாரத்தின் அடிப்படையாக அமைதல் வேண்டும். மேலும் அம்மக்களின் விருப்பமானது தொடர்ந்து நேர்மையாக நடைபெறும் தேர்தல்களால், ஆளப்படுதல் வேண்டும். அனைவரும் எவ்வித பாகுபாடின்றி சமமாக தேர்தல்களில் மறைமுக வாக்களிப்பின் மூலமாகவோ அல்லது சுதந்திரமாக வாக்களிப்பதன் மூலமாகவோ தேர்ந்தெடுக்கும் முறையாகும். இந்திய குடியரசு இவ்வகையான மக்களாட்சிக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

<u>வாக்குரிமை</u>
<u>ADULT SUFFRAGE:</u>

வாக்குரிமையின் கொள்கைகள்
Theories of the Nature of Suffrage:

- குடியாட்சியில் வாக்காளர்கள் முக்கிய பங்காற்றுகிறார்கள். வாக்குரிமை பெற்ற குடிமக்கள் எல்லோரையும் வாக்காளர் தொகுதி என்று குறிப்பிடுகிறோம். குடிமக்களுக்கு அவர்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்கு தரப்படுகின்ற உரிமையே வாக்கு அல்லது ஓட்டு என்று குறிப்பிடப்படுகிறது. வாக்கு என்பது குடிமக்கள் அரசியலில் பங்கேற்பதற்கு தரப்படும் அரசியல் உரிமை எனலாம்.

வயதுத்தகுதி
Age Qualification:

- வயது என்பது ஒரு முக்கியத்தகுதியாகும். உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் முதிர்ச்சி பெற்றவர்களே நன்கு முடிவெடுக்க இயலும் என்பதால் வயது ஒரு தகுதியாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

- இந்தியாவில் முதலில் 21 வயது நிரம்பியவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டு வந்தது. பின்னர் 1988 ஆண்டு முதல் 18 வயது நிரம்பியவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்படுகிறது.

வாக்கின் வகைகள்
TYPES OF VOTE

வாக்கு பல்வேறு வகைப்படும். அவையாவன:

1. **ஒரு நபருக்கு ஒரு வாக்கு**:
   One man One vote:

   இதன்படி, தகுதியுடைய அனைவருக்கும், ஒரு வாக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது. பெரும்பாலும் இம்முறையே பல நாடுகளிலும் பின்பற்றப்படுகின்றது. இம்முறையில் ஒரு வாக்காளர் தனக்கு வழங்கப்பட்டுள்ள வாக்கை ஒருவருக்கு மட்டுமே அளிக்க இயலும்.

2. **ஒற்றை மாற்று வாக்கு:**
   Single Transferable vote:

   இம்முறையானது, பல உறுப்பினர் தொகுதி முறைக்கு மிகவும் பொருத்தமானதாகும். இதிலும் ஒரு வாக்காளருக்கு ஒரு வாக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது. ஆனால், அவர், அதனை தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு முன்னுரிமை அளித்து முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என அளிக்கலாம்.

   ஒருவர், முதலாவது முன்னுரிமை அளித்த வேட்பாளர் போதுமான வாக்குகள் பெறாத நிலையில், இவரது வாக்கு இரண்டாவது முன்னுரிமை நபருக்கு வழங்கப்படும். இந்தியாவில் குடியரசுத்தலைவர், துணைக்குடியரசுத்தலைவர் பதவிக்கு இம்முறை பின்பற்றப்படுகிறது.

3. **பன்மைவாக்கு**:
   Plural Voting:

   இம்முறையில் ஒரே வாக்காளருக்கு பல வாக்குகள் வழங்கப்படுகின்றது. சில நாடுகளில், வாக்காளருக்கான தகுதிகள் பல இருக்கும். சொத்து வைத்திருப்போர், வரி செலுத்துவோர், கல்வி தகுதியுடையோர், என குறிப்பிடப்பட்டு, இவற்றில் ஏதேனும் ஒன்று இருந்தால் வாக்குரிமை வழங்கப்படும். ஒவ்வொரு தகுதிக்கும் ஒரு வாக்கு என்ற அளவில், சொத்து வைத்திருந்து, வரியும் செலுத்தி, கல்வித்தகுதி பெற்ற ஒருவர் மூன்று தகுதிகளையும் பெற்றிருப்பதால் அவருக்கு மூன்று வாக்குகள் வழங்கப்படும். பெல்ஜியம் நாட்டில் முன்பு, இம்முறை இருந்தது.

4. **வெளிப்படையான வாக்கு**:
Open Ballot:

இம்முறையில் வாக்காளர், தான் யாரை ஆதரிக்கிறார் என்பதை வெளிப்படையாக, கையை உயர்த்திக்காட்டியோ, வாய்மொழியாகவோ தெரிவிப்பார். மான்டெஸ்கியூ எனும் அரசியல் சிந்தனையாளர், இம்முறையை ஆதிரிக்கிறார். ஏனெனில், அறிவுள்ள ஒருவர், வெளிப்படையாக அவர் யாரை ஆதரிக்கிறார் என்று தெரிவித்தால் அவர் வழியில், விழிப்புணர்வு இல்லாதவர்களும் தங்கள் ஆதரவை தருவார்கள் என்பதேயாகும். இம்முறையானது பெரிய எண்ணிக்கையிலான வாக்காளர்களிடையே சாத்தியப்படாது. ஆனால், சட்டமன்றம், நாடாளுமன்றம் ஆகிய அவைகளில், ஒரு (மசோதா) வாக்கெடுப்பிற்கு விடப்படும்போது உறுப்பினர்கள் இவ்வகையில் தங்கள் ஆதரவை அல்லது எதிர்ப்பை பெரும்பாலும் தெரிவிக்கிறார்கள்.

5. **ரகசிய வாக்கு**:
Secret Ballot

இம்முறையில் வாக்காளர் அவர் யாருக்கு வாக்களிக்கிறார் என்பதை பிறர் அறியாவண்ணம் மறைவாகச் சென்று பதிந்து விட்டு வருவார். இம்முறையே இன்று பிரதிநிதித்துவ மக்களாட்சியுள்ள நாடுகளில் பெருமளவு பின்பற்றப்படுகின்றது.

- வாக்குச் சாவடிகளில் இதற்கென மறைவான தடுப்புகள் இருக்கும். வாக்காளர் அங்கு சென்று, வாக்குச் சீட்டில், தனது வாக்கினை பதிந்து விட்டு, அதனை பிறர் காணாத வண்ணம் மடித்து, வாக்குப் பெட்டியில் சேர்ப்பார். இதனால் யார் எவருக்கு வாக்களித்தார் என்பது ரகசியமாக வைக்கப்படுகிறது. எனவே, வாக்காளர் வேட்பாளர்களின் வெறுப்புக்கு உள்ளாவது தவிர்க்கப்படுகிறது. இந்தியாவில் நாடாளுமன்ற, சட்ட மன்றத் தேர்தர்களிலும் இம்முறையே பின்பற்றப்படுகிறது. மக்களாட்சியில் ரகசிய வாக்கெடுப்பு தற்போது அவசியமானதாகக் கருதப்படுகின்றது.

குடியுரிமை
CITIZENSHIP

- அரசு என்பது அரசியல் சார்புடைய அமைப்பு அல்லது நிறுவனம். இவ்வரசு மக்களுடைய பொதுநலத்தை பெற்று தருவதற்காக உள்ள அரசாங்கமொன்றையுடையது. மக்கள் என்பது இவ்விடத்தில் குடிமகன் அதாவது குடிமையுரிமை பெற்றவர் என்பதைக் குறிக்கும்.

- அரசியல் அறிவியலில், குடிமகன் என்பவன், ஒரு அரசின் எல்லைப்பரப்பிற்குள் வாழ்ந்து, அதன் செயல்பாடுகளில் பங்கேற்று, சமூக மற்றும் அரசியல் உரிமைகளைப் பெற்றவனாவான்.

குடியுரிமையின் வகைகள்

Types of Citizenship

- குடியுரிமை இரண்டு வகைப்படும் அவை
    1. இயற்கைக் குடியுரிமை
    2. பெறப்பட்ட குடியுரிமை

விகிதாச்சார பிரதிநிதித்துவம்

PROPORTIONAL REPRESENTATION:

- இம்முறையின் அடிப்படை நோக்கம், சமுதாயத்தின் அனைத்து பிரிவினருக்கும் பிரதிநிதித்துவம் அளிப்பதாகும். இவ்வகையில் உருவாக்கப்படும் சட்டமன்றம், அனைத்துப் பிரிவினரின் கருத்தையும் பிரதிபலிப்பதாக இருக்கும். ஒவ்வொரு பிரிவினருக்கும் தத்தம் மக்கள் தொகைக்கேற்ப பிரதிநிதித்துவம் கிடைக்கிறது.

<u>அரசியல் கட்சிகள்</u>

<u>POLITICAL PARTIES</u>

<u>அரசியல் கட்சிகளின் பரிணாமம்</u>

Evolution of Political Parties:

- கட்சி என்பது கூட்டு வாழ்க்கைக்கான அமைப்பேயாகும். நிறுவப்பட்ட சமுதாயம் மட்டுமே கட்சி எனப்படும். அரசியல் கட்சி என்பது 200 ஆண்டுகட்குட்பட்ட ஒரு நவீன நிகழ்வாகும்.

- இத்தகைய குடியாட்சி அமைப்புகளில் அரசியல் கட்சிகள் மக்களுக்கு அரசியலில் ஆர்வத்தை ஊட்டி பங்கேற்க கற்றுத்தருகின்றன.

அரசியல் கட்சிகளின் தேவை

Need for Political Party:

- ஒரு தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கம் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் அமைப்புகளுக்கு அரசியல் கட்சி என்பது மிகவும் அவசியம். மக்கள் மற்றும் அரசாங்கம், வாக்காளர்கள் மற்றும் பிரதிநிதித்துவ

நிறுவனங்களுக்கு இடையே ஒரு உறவை ஏற்படுத்தும் பாலமாக அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன.

கட்சிகளின் வகைகள்

Types of Political Parties

- கட்சிகளை அவைகளின் நோக்கம், கொள்கை மற்றும் தங்களின் லட்சியங்களையடையக் கடைபிடிக்கும் வழிமுறைகளைக் கணக்கில் கொண்டு நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவைகள் 1. பழமைவாதிகள் 2. மிதவாதிகள் 3. பிற்போக்குவாதிகள் 4. தீவிரவாதிகள் போன்றவையாகும்.

பிறகட்சிகள் கீழ்க்கண்டவற்றின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்படுகின்றன

The other major classification of parties is based on:

1. அரசியல் கட்சிகளில், ஒரு கட்சி, இரண்டு கட்சி மற்றும் பலகட்சிகள் முறை ஆதிக்கம் செலுத்துகின்றன.

2. கட்சிகளின் அமைப்பில் உள்ள முக்கிய குணாதிசயங்கள் யாவையெனில், சில கட்சிகள், தலைவனையும் சில கட்சிகள் கொள்கைகளையும், சில அமைப்புகள் ஆர்வத்தையும் முன்னிலைப்படுத்தி செயல்பட்டு வருகின்றன.

3. கட்சிகள் தேசத்தின் எந்தெந்தப் பகுதியில் ஏற்படுகின்றனவோ அப்பகுதியின் செல்வாக்கைப் பயன்படுத்தி நாட்டிற்குள் ஊடுருவிப் பரவுகின்றன. இவை தேசிய கட்சிகள், மண்டலக் கட்சிகள் மற்றும் உள்ளூர் கட்சிகள் என செயல்படுகின்றன.
4. மௌரிஸ் துவேகர் என்பவர் தெரிவித்துள்ள நான்கு முனைகட்சி அமைப்பு. அவை
    1. கட்சியின் உட்குழு (caucus)
    2. உட்பிரிவு (the branch)
    3. அணு (cell) மற்றும்
    4. இராணுவம் (Militia) என்பவையாகும்

ஒற்றைக்கட்சி முறை (Single Party System)

- ஒற்றைக்கட்சி அமைப்பில் ஒரே ஒரு கட்சிதான் இருக்கும். இந்த நாட்டின் சட்டம் மாற்று கட்சிகளை அனுமதிக்காது. 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட ரஷ்யப் புரட்சியே ஒற்றைக்கட்சி அமைப்பு உருவாவதற்கு அடிகோலியது. இதற்கு உதாரணம் கம்யூனிஸ்ட் சீனா

இருகட்சி முறை
Two Party System:

- இரு கட்சிகள் இருக்கும். அதில் ஒன்று ஆளும் கட்சி. மற்றொன்று எதிர்கட்சி. இதற்கு உதாரணம்

    1. இங்கிலாந்து – இங்கு பழமைவாத கட்சி மற்றும் தொழிலாளர்கட்சி ஆகிய இருகட்சிகள் உள்ளன

    2. ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) – ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசுக்கட்சி என்பன

பலகட்சி அமைப்பு
Multi Party System:

- சமுதாய அமைப்பில் ஏற்பட்ட பிளவுகளும் தேசிய அளவில் ஏற்பட்ட வேறுபாடுகளும் பலகட்சி முறை அமைப்பு உருவாவதற்குக் காரணம். இதில் இரண்டுக்கு மேற்பட்ட கட்சிகள் இருக்கும். இதற்கு இந்தியா மற்றும் பிரான்சு நாடுகள் உதாரணமாகும்.

<u>அரசியல் கட்சிகள்</u>
POLITICAL PARTIES:

தேசியக்கட்சி
NATIONAL PARTY:

- பூகோளப்பிரிவு மற்றும் பரப்பு அடிப்படையில் நான்கு வகையான கட்சிகள் உள்ளன. அவை
    1. தேசிய கட்சிகள்
    2. மாநிலகட்சிகள்
    3. ஒரு சில மாநிலங்களுக்கு மட்டும் தொடர்புடைய கட்சிகள் (trans regional parties)
    4. உள்ளூர்கட்சிகள்

- 1954-இல் நடந்த லோக்சபாவிற்கான பொதுத்தேர்தலின்போது குறைந்தது. நான்கு மாநிலங்களிலாவது 4 சதவீதத்திற்கு குறையாத வாக்குகள் பெற்ற சில கட்சிகளை தேசியக் கட்சிகளாக இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

ஒரு கட்சி தேசிய கட்சியாக அங்கீகரிக்க, நிபந்தனைகள்

- ஒரு கட்சி மக்களவையில் 2% இடங்களை வென்றது (11 இடங்கள்) குறைந்தது 3 வெவ்வேறு மாநிலங்களில் இருந்து
- லோக்சபா அல்லது சட்டப் பேரவைக்கான பொதுத் தேர்தலில், கட்சி நான்கு மாநிலங்களில் 6% வாக்குகளைப் பெற்று கூடுதலாக 4 மக்களவைத் தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்
- ஒரு கட்சி நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் மாநிலக் கட்சியாக அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும்

இந்தியாவில் மொத்தம் 8 தேசிய கட்சிகள் உள்ளன

1. காங்கிரஸ் கட்சி
2. பாரதிய ஜனதா கட்சி
3. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.ஐ)
4. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.எம்)
5. அனைத்திந்திய திரிணாமுல் காங்கிரஸ்
6. பகுஜன் சமாஜ் காட்சி
7. இந்திய நேஷனலிஸ்ட் காங்கிரஸ் கட்சி
8. தேசிய மக்கள் கட்சி

மாநில கட்சி

REGIONAL PARTY:

- இந்தியாவில் மாநிலக்கட்சிகள் அந்தந்த மாநில அடிப்படையிலும், குடியாட்சிமுறைப் பண்பாடு, சமூக பொருளாதார மற்றும் குடிமக்களிடையே நிலவும் பிரிவுகளுக்கு ஏற்ப தோன்றியிருக்கின்றன. உ.ம். இந்தியாவில் அஸ்ஸாம், நாகலாந்து, மிசோரம், பஞ்சாப், ஒரிசா, ஆந்திரா மற்றும் தமிழ்நாடு.
- இவை ஒவ்வொன்றும் தனக்கென சில திட்டங்களையும், மாநில தன்னாட்சியை நிறைவேற்றும் எண்ணமும் கொண்டவை. இந்தியா போன்ற கூட்டாட்சி நாடுகளில் தான் வேற்றுமையில் ஒற்றுமையை பார்க்க இயலும்.

ஜாதிக் கட்சி
CASTE PARTY:

- பொதுவாக மக்கள் அவர்கள் வசிக்கும் பகுதி, தொழில், ஜாதி, சமுதாயம், மதம் மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் பிரிக்கப்படுகின்றனர். சில சமயங்களில் அவர்களின் உடல் நிறத்தினடிப்படையிலும் பிரிக்கப்படுகின்றனர்.

- இந்தியாவைப் பொறுத்தவரை மக்கள் பல்வேறு குழுக்களைச் சேர்ந்தவர்களாகவுள்ளனர். அதில் ஜாதி ஒருவகை, இத்தகைய பிரிவு இந்தியாவில் மட்டும்தான் உள்ளது. இந்தியாவில் பலவகையான ஜாதி அமைப்புகள் உள்ளன. இந்து மதத்திலுள்ள சாதிப்பிரிவினை வாதம் தான் இதற்குக் காரணம்.

வகுப்புவாதக்கட்சி
COMMUNAL PARTY:

- இனஉணர்வுகள் மற்றும் இனநம்பிக்கையின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டவை தான் வகுப்புவாதக் கட்சிகள். இவைகளும் சாதிக் கட்சிகளைப் போன்று குறிப்பிட்ட இனமக்களைக் கொண்டவையாகும்.

- இவற்றின் நோக்கம் தம் இன மக்களுக்கு பாதுகாப்பு மற்றும் அரசிடமிருந்து தம் இனமக்களுக்கு அதிக சலுகைகள் பெறுவதுமாகும். இவர்கள் சுயலாப விரும்பிகளாகவும் இருப்பர்.

- இக்கட்சிகள் பொதுவாக மற்ற கட்சிகளின் எண்ணங்களுக்கு எதிராகவே செயல்படுகின்றன. எனவே ஜாதி, மத, நிற உணர்வில்லாத பிற கட்சிகள்இவர்களுக்கு ஆதரவு கொடுப்பதில்லை. இத்தகைய கட்சிகள் தேசிய உணர்வுகளுக்கு விரோதமாகச் செயல்படுவதால் நாம் இவற்றை ஆதரிக்கக்கூடாது.

தன்னார்வ அமைப்புகள்
INTEREST GROUPS:

- அனைத்து சுதந்திர நாட்டிலும் மக்களின் பலவகையான ஆர்வங்களை வெளிப்படுத்தும் முகமாக பல தன்னார்வ அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கும். இவை தங்களுக்குள்ளும் அரசாங்கத்திற்கிடையிலும் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு செயல்படுகின்றன.

- இத்தன்னார்வ அமைப்புகள் மக்களின் ஆர்வத்தை அதிகப்படுத்தி அரசியல் கட்சிகளுக்கு பக்கபலமாக இருப்பதுடன் அவற்றின் நோக்கத்தை நிறைவேற்ற உதவுகின்றன. இவை அரசியலில் பெரும்பங்கு வகிக்கின்றன. கட்சிகள் அரசியல் அமைப்பில் அங்கீகாரம் பெற்ற சாதனமாகவும், வெளிப்படையாகவும் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டவை.

- ஆனால் தன்னார்வ அமைப்புகள் அசாதாரணமானவையாக இருக்கும். இவை ரகசியமாக செயல்படும். இவர்கள் எதையும் ரகசியமாக திட்டம் தீட்டி செயல்படுத்துபவை. சில சமயங்களில் இத்தன்னார்வ அமைப்புகள் பிறரால் ஏற்றுக்கொள்ளப்படாதவையாகவும் இருக்கும்.

- பேராசிரியர் ஃபைனர் என்பவர் இதனை 'பெயரிடப்படாத பேரரசு' எனவும் மற்றவர்கள் இதனை "கண்ணுக்குப் புலப்படாத அரசாங்கம்" எனவும் "அங்கீகாரமற்ற அரசாங்கம்" எனவும் குறிப்பிடுகின்றனர்.

<u>**பொதுமக்கள் கருத்து**</u>

PUBLIC OPINION:

- நவீன ஜனநாயக ஆட்சியில் மக்கள் கருத்து மிகவும் முக்கியமான பங்காற்றுகிறது. ஜனநாயகம் என்பது மக்களுக்காகவும், மக்கள் கருத்தினடிப்படையிலும் ஒப்புதலின் பேரிலும் ஏற்படுத்தப்படுவது என விவாதிக்கப்படுகிறது.

- சர்வாதிகார ஆட்சியில் கூட மக்கள் கருத்துக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. மக்கள் கருத்து என்பது, ஒரு பிரச்சினையின் மீது ஒரு குழு உறுப்பினர்கள் எண்ணங்களின் வெளிப்பாடேயாகும். இந்தக்கருத்து தேர்தலின் போதும், முறையான சட்டம் இயற்றும் போது கொள்கை முடிவெடுக்கும் போதும் வெளிப்படும்.

மக்கள் கருத்துக்குத் தேவையான சூழ்நிலைகள்

Conditions Necessary for Public Opinion:

1. மக்களின் சிந்தனைத்திறன்
2. தேசியப் பிரச்சினைகளில் மக்களுக்குள்ள ஆர்வம்
3. குழுக்கள் அமைத்தல்
4. அரசியல் தலைவர்களின் வழிகாட்டுதல்
5. எழுத்தாளர்களின் பங்கு
6. சமூக ஆர்வம் மற்றும் ஒற்றுமையாக இருத்தல்

தேர்தல் ஆணையம்
Election Commission:

- தேர்தலை மேற்பார்வையிடுவதற்கும், வழிபடுத்துவதற்கும், மற்றும் கட்டுக்கோப்புடன் தேர்தல் நடத்துவதற்காகவும் தேர்தல் ஆணையம் அமைக்கப்பட்டது. அந்தந்த நேரத்திற்குத் தகுந்தமாதிரி வாக்காளர் பட்டியல்களில் திருத்தம் செய்வதும், பட்டியல்கள் தயார் செய்வதும் இந்த ஆணையத்தின் பணியாகும்.

- இவ்வாணையம் பாராளுமன்றம், சட்டமன்றம், குடியரசுத்தலைவர் குடியரசு துணைத்தலைவர் ஆகியோரைத் தேர்ந்தெடுப்பதற்கும் தேர்தல் நடத்துகிறது.

- இவ்வாணையம் தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் இதர சில தேர்தல் ஆணையர்கள் அடங்கியதாகும். இவ்வாணையத்தின் உறுப்பினர்களை தேவையான போது குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.

- இவர்கள் குடியரசுத்தலைவரால் 5 ஆண்டுகளுக்கு நியமிக்கப்படுகிறார்கள். இவர்களது பணியும், பணிக்காலமும் பாராளுமன்றத்தால் நியமிக்கப்படுகிறது. இவர்கள் பணியிலிருக்கும் போது பணி விதிகளை மாற்ற இயலாது.

- உச்ச நீதிமன்ற நீதிபதியைப் பதவியிலிருந்து எடுக்க எந்த விதியைக் கடைபிடிக்கப்படுகிறதோ, அதே விதியின்படிதான் தலைமை தேர்தல் ஆணையரையும் நீக்க முடியும். எனவே, நினைத்தவுடன் இவரை பதவியிலிருந்து நீக்கமுடியாது. இவரை இவை வரம்புமீறும் ஆட்சியாளர்களிடமிருந்து பாதுகாக்கிறது.

- ஒவ்வொரு மாநிலத்திலும் தேர்தல் ஆணையத்தின் கிளைகளிருக்கும். இதற்கு அந்தந்த மாநிலங்களை கலந்தாலோசித்து ஒரு முதன்மைத் தேர்தல் அதிகாரியை தேர்தல் ஆணையர் நியமிப்பார். அவர்கள் மாநிலங்களில் தேர்தல் நடத்த நிலையான தேர்தல் அதிகாரிகளாகவும் அமைப்பாகவும் செயல்படுவார்கள்.

- தேர்தல் ஆணையத்தில் பணியாற்றுவோர் எண்ணிக்கை குறைவாக இருக்கும். ஆனால் தேர்தல் காலங்களில் தேவையான அதிகாரிகளும், பணியாளர்களும் பணியில் அமர்த்தப்படுவர். (உ.ம். அரசுத்துறைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள்)

DIRECTOR'S COPY

அரசும் அதன் கூறுகளும்
THE STATE AND ITS ELEMENTS

முக்கியமான மேற்கோள்கள்

வரையறை:
Definition

உட்ரோவில்சன்:

- உட்ரோவில்சன் என்பவர், ''அரசு என்பது ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில், சட்டத்திற்காக அமையப்பெறும் மக்கள் கூட்டமாகும் என்கிறார்''.

அரிஸ்டாட்டில்:

- அரிஸ்டாட்டில், அரசு என்பது ''ஆனந்தமான மற்றும் கௌரவமான வாழ்க்கை அடங்கிய தன்னிறைவான வாழ்க்கை பெறுவதற்காக கிராமங்களும், குடும்பங்களும் இணைந்த ஒன்றியமாகும் எனக் குறிப்பிடுகிறார்''.

ஹாலண்ட்:

- ஹாலண்ட் கருத்துப்படி ''பல்வேறு மனித கூட்டங்களை ஒன்றிணைத்து, ஒரு குறிப்பிட்ட எல்லைப் பரப்பில் குடியேறி, அவர்களில் பெரும்பான்மையானவரின் கருத்துக்களை, அதனை எதிர்ப்போரையும் மீறி நிலவச் செய்வதாகும்.

பர்கஸ்:

- பர்கஸ் எனும் நூலாசிரியர், ''மனித வர்க்கத்தின் ஒரு குறிப்பிட்ட பங்கினர் ஒரு அமைப்பாக இருந்து செயல்படுவதே அரசு ஆகும்'' என்கிறார்.

கார்னர்:

- கார்னர் என்பவர், ''அரசு என்பது ஒரு மக்கள் கூட்டம் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில் வசிப்பதாகும். அவர்கள் வெளி சக்திகளுக்கு கட்டுப்படாமல், ஒரு முறையான அரசாங்கத்தை பெற்று தங்களுக்குள் ஏற்பட்ட இயல்பான கீழ்ப்படிதலை அரசிற்கு செலுத்துகிறார்கள்.

லாஸ்கி:

- பேராசியர் லாஸ்கி அரசு பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார். “ஒரு நிலப்பரப்பிற்கு உட்பட்ட சமுதாயமானது அரசாங்கம் என்றும், குடிமக்கள் என்றும் இரு வேறாக வகுக்கப்பட்டுள்ளது. அவர்களின் உறவுமுறை அரசினுடைய நிர்பந்திக்கும் அதிகாரத்தின் மூலமாக தீர்மானிக்கப்படுகிறது.

கூறுகள்:

- மேலே தரப்பட்டுள்ள விளக்கங்கள் அடிப்படையில் அரசு கீழே தரப்பட்டுள்ள கூறுகளைக் கொண்டிருப்பதாகக் குறிப்பிடலாம்.

அரசின் கூறுகள்

மக்கள் தொகை   நிலப்பகுதி   அரசாங்கம்   இறைமை

எலியட்:

- “நிலப்பகுதி இறைமை என்பது அந்தந்த அரசின் எல்லைப் பகுதியினுள் சுதந்திரமாகவும் வெளியிலிருந்து கட்டுப்பாடு இல்லாமல் இருப்பதையும் தற்கால அரசுமுறை வாழ்க்கை குறிக்கும்”, என பேராசிரியர் எலியட் என்பவர் கூறுகிறார்.

பேராசிரியர் பார்க்கர்:

- “சமூக மற்றும் அரசியல் கோட்பாடுகளின் அடிப்படைகள்” என்ற நூலில் அரசு, மற்றும் சமுதாயம் ஆகியவற்றிற்கு இடையேயுள்ள வேறுபாடுகளை பின்வரும் மூன்று அடிப்படைகளில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

  அவை:
  1. நோக்கம் அல்லது பணி
  2. நிறுவனம் மற்றும் கட்டமைப்பு
  3. வழிமுறை

JUSTICE HUGHES:

- அமெரிக்க உச்சநீதி மன்ற நீதிபதி ஹக்ஸ் குறிப்பிட்டதைப் போல “நாம் அரசியலமைப்புக்கு கட்டுப்பாட்டு இருக்கிறோம்.

நீதித்துறையின் பணிகள்:
Functions of Judiciary:

- நீதி நிர்வாகம் செய்தல்
- சட்டம் என்றால் என்ன, அதன் பொருள், அதன் எல்லைகள் யாவை என முடிவு செய்தல்.
- கேட்கப்படும் விளக்கங்கள் பற்றி ஆலோசனை கூறுதல்.
- சட்டங்களும், உரிமைகளும் பறிக்கப்படும்போது நீதிப் பேராணைகள் மூலம் தடுத்தல்.
- அரசியலமைப்பு சட்டப் பாதுகாவலனாக இருத்தல்.

இறைமை
Sovereignty

முன்னுரை:
Introduction

அரிஸ்டாட்டில்:

- அரிஸ்டாட்டில் இறைமையை அரசின் ‘‘ஊயிர்வான அதிகாரம்’’ என்று கூறியிருக்கிறார். இடைக்காலத்தில் ரோமன் சட்ட வல்லுனர்களும் இந்த கருத்தை அதிகமாக அறிந்திருந்தனர்.

ஜீன் போடின்:

- ஜீன் போடின் என்பவர் தான் தன்னுடைய ‘‘குடியரசைப்பற்றிய ஆறு நூல்கள்’’ என்ற நூலில் இறைமை என்ற கருத்தை முதன்முதலாக முறைப்படியாக பயன்படுத்தினார்.

- ஜீன் போடின் என்பவர் இறைமை என்பது, குடிமக்களின் மீது சட்டத்தால் கட்டுப்படுத்த முடியாத தொடர்ந்து செலுத்தப்படும் உயர்வான அதிகாரம் இதனை அரசு பயன்படுத்துகிறது.

லாஸ்கி (H.J. Laski)

- அவர்களின் கருத்துப்படி, இறைமை என்பது சட்டப்படியாக, தனிமனிதர்களின் மீதும், அல்லது குழுக்களின் மீதும் செலுத்தப்படும் அதிகாரமாகும்.

ஆஸ்டினின் இறைமைக் கோட்பாடு (ஒருமைவாதக் கருத்து):

- ஒரு மானிட மேன்மையாளர், தன்னைப் போன்ற உயர்வானவர்க்கு பணிதலை தெரிவிக்காமல், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திலிருந்து பணிதலை பெறுவாரானால், அந்த சமுதாயத்தில் அவர்தான் இறைமை அதிகாரத்தை பெற்றுள்ள மானிட மேன்மையாளராக கருதப்படுகிறார். அந்த சமுதாயம் அந்த மானிட மேன்மையாளரையும் சேர்த்து சுதந்திரமாக செயல்படும் அரசியல் சமுதாயமாகும்.

அரிஸ்டாட்டில்:

- அரசியலின் தந்தை எனப் போற்றப்படும் அறிஞர் அரிஸ்டாட்டில் ‘‘குடிமக்கள் அரசின் அங்கம் எனவும் அவர்களுடைய தொடர்புடைய அரசியலமைப்பு ஒன்றோடு ஒன்று தொடர்புபடுத்தி ஒழுங்குபடுத்துகிறதெனவும்’’ கூறுகிறார்.

IMPORTANT BOOKS

PLATO	“Republic”
ARISTOTLE	“Politics”
ROUSSEAU	“Social Contract”
MAX WEBER	“Bureaucracy”
MACHIAVELLI	“Prince”
LASKI	“A Grammar of Politics”
HOBBES	“Leviathan”
MARX	“Das Capital”
MARX & ENGELS	“ Manifesto of Communist”
GUNAR MYRDAL	“Asian Drama”
ADAM SMITH	“Wealth of Nation”
MONTES QUIEG	“Spirit of Laws”
A.V.DICEY	“Rule of Law”
J.S.MILL	“On Liberty”

மானிட உரிமைகளும் மக்களாட்சியும்
HUMAN RIGHTS AND DEMORACY:

- மானிட உரிமைகள் பிரகடனம் குறிப்பிடுவதாவது, "மனிதர்கள் அனைவரும் பிறப்பால், கண்ணியத்தால் மற்றும் உரிமைகளால் சுதந்திரமானவர்கள். அவர்களிடம் காரண காரியங்கள் மற்றும் நியாய உணர்வு அடிப்படையில் எல்லோரும் சகோதர எண்ணத்துடன் செயலாற்ற வேண்டும் என்ற நோக்கம் இருக்கிறது"

- 1948ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் தேதி ஐக்கிய நாடுகள் கழகம் பொதுப்பேரவை மானிட உரிமைகள் பிரகடனத்தை அங்கீகரித்தது. இப்பிரகடனம் உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கிறது.

- ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10ஆம் தேதி மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது